★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE : 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஆனி 26உ திங்கள் (9—7—56) ★ ★ வெளியூர்: ஆனி 27உ செவ்வாய் (10—7—56) [இதழ் 21

'உங்கள் வழியே எங்களதும்...!'

ஞாயிற்றுக் கிழமைக்குப் பதிலாக வெள்ளிக் கிழமையைப் பொது விடுமுறை நாளாகக் கொள்வது என்று எகிப்தில் உள்ள ரஷ்யத் தூதுவராலயம் முடிவு தெரிவித்துள்ளதாம்.

முஸ்லீம்களுக்குப் புனித நாளான வெள்ளிக் கிழமையே விடுமுறை நாள் என்று எகிப்திய சர்க்கார் அனுசரித்து வருவதற்கு ஒப்பவே இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டதாம்!

இப்போது வெளிநாட்டு பாங்கிகள், தொழில்—வர்த்தக ஸ்தாபனங்கள், கடைகள், பள்ளிகள் எல்லாம் ஞாயிறன்றுதான் மூடப்பட்டு வருகின்றன. இவற்றையும் வெள்ளியன்றே பொதுவிடுமுறை அனுசரிக்கச் செய்ய எகிப்திய சர்க்கார் யோசனை செய்து வருகின்றனராம்.

வடக்கு கொழுக்கிறது! தெற்கு தேய்கிறது!

தட்சிணப் பிரதேசம் அமைப்புத் தகராறு!

தமிழ் நாடு காங்கிரசின் இரண்டுங்கெட்டான் தீர்மானம்

கோஷ்டிகளிடை 'சமரசம்' தேட முயற்சியாம்

சென்னை, ஜூலை 8—

"தட்சிணப் பிரதேசத் தகராறில், காங்கிரஸ்காரர்களே! நீங்கள் ஈடுபடாதீர்கள் காங்கிரஸ் கட்சியையும் ஈடுபடுத்தாதீர்கள்! அதுபற்றி எந்தக் கவலையும் கொள்ளாதீர்கள்! மாறாக, இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தை அமுல் செய்வதில் கவனம் செலுத்துங்கள்,"

என்று, தமிழ் நாடு காங்கிரசின் செயற் குழு இரண்டுங்கெட்டான் நிலையில், தீர்மானம் ஒன்று நிறைவேற்றியிருக்கிறது.

"தட்சிணப் பிரதேசம் அமைப்பது என்ற விவகாரம், இப்போது காங்கிரஸ் கட்சியைப் பிளவுபடுத்தி பலவீனப்படுத்தும் என்று அச்சமூட்டிக் கொண்டிருக்கிறது. இரு மொழி அல்லது பல மொழி மாநிலங்கள் அமைப்பது என்ற நோக்கத்தின் அடிப்படையே, பெரும் பகுதியில், நாட்டின் ஒற்றுமையைப் பெருமளவு உருவாக்குவது என்பதுதான்; ஆனால், இந்த விவகாரத்தை இப்போதுள்ள சூழ்நிலையில், தகராறுக்குரிய வகையில் கிளப்புவது, எதிர் மறையான பலனையே தரும்—கட்சியைப் பலவீனப்படுத்தும்.

"எனவே, செயற் குழு, காங்கிரசார் இந்த தகராறுக்குரிய விவகாரத்தில் ஈடுபடக்கூடாது—ஈடுபடுவது கட்சியைப் பிளந்து பலவீனப்படுத்தும்; எனவே, காங்கிரசார், தங்கள் கவனம் முழுவதையும் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தை அமுல் செய்வதில் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறது,"

என்பதுதான், காங்கிரஸ் செயற் குழுவின் தீர்மானமாகும்.

இந்தத் தீர்மானம், காங்கிரசில், 'தட்சிணப் பிரதேசம் வேண்டும்-வேண்டாம்' என்ற சண்டையிலீடுபட்டிருக்கும் இரு கோஷ்டிகளுக்கும் 'சமரசம்' செய்து வைக்கக்கூடியதென்று காங்கிரஸ் வட்டாரத்தினர் கருத்தறிவிக்கின்றனர்.

டாக்டர் சுப்பராயன் உட்பட ஏழு செயற்குழு உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை என்றும், கூட்டம் ஞாயிறன்று காலை, சர்க்கார் 'எஸ்டேட்' மாளிகை நடைபெற்றது என்றும் தெரியவருகிறது.

மறுக்கொணாத உண்மை இது-மனமும் மிகப் புண்ணாகுது!

அனைவரும் கூடி அழுவோம் பாடி-ஐயன் டில்லியின் ஆதரவு நாடி!

'செத்துப் போன பிரச்சினை!'

திருச்சி, ஜூலை 8—

"தட்சிணப் பிரதேசம் ஒரு செத்துப்போன பிரச்சினை," என்று டி. டி. கிருஷ்ணமாச்சாரி பத்திரிகையாளரிடம் தெரிவித்திருக்கிறார்.

காங்கிரஸ் ஆட்சியில் பட்டினிக் கொடுமை!

சேலத்தில் ஒரு 'நவீன நல்லதங்காள்'

குழந்தையைக் கொன்று தானும் தற்கொலை!

சேலம், ஜூலை 8—

வேலையில்லை! வருமானமில்லை! வறுமை வாட்டியது! பசி பிடுங்கித் தின்றது! ஒரு நாளா இரு நாளா—பட்டினியோடு, இரவுகளைத் தூங்காமல் கழிப்பதற்கு? என்ன செய்வது? அழுது அழுது எத்தனை நாட்களை ஓட்ட முடியும்? பாழும் வயிறு பசிக்காமலாவது இருக்கிறதா? விளைவு? பச்சிளம் குழந்தையைக் கொன்றுவிட்டுத் தானும் தற்கொலை செய்து கொண்டாள் என்ற சோகச் செய்தி கிடைத்திருக்கிறது.

சின்னத்தாயி என்ற அந்தப் பெண்மணி, பெரியதம்பி (கவுண்டர்) என்பவரின் மனைவி என்றும், பெரியசாமி கவுண்டருக்குக் கடந்த பல மாதங்களாகவே வேலை எதும் இல்லை என்றும், அதனால் பல இரவுகளைப் பட்டினியாகவே கழிக்க நேரிட்டது என்றும் போலீஸ் விசாரணையின்போது தெரியவந்திருக்கிறது.

சின்னத்தாயி அம்மாள், தன் கைக்குழந்தையைக் கிணற்றில் வீசி எறிந்துவிட்டு, தானும் கிணற்றில் குதித்து தற்கொலை செய்துகொண்டிருக்கிறார்.

1956-ம் ஆண்டில், பட்டினிச் சாவுகளின் பட்டியல், இப்படிச் சோகச் சம்பவங்களால் நிரம்பிக் கொண்டிருக்கிறது.

'நல்லதங்காள்' கதை இந்தக் காங்கிரசார் ஆட்சிக் காலத்தில், சர்வசாதாரணமானதாக ஆகிவிட்டது.

சேலம், தர்மபுரி வட்டம், மூலக்காடு கிராமத்தில் இந்தச் சம்பவம் நடைபெற்றிருக்கிறது.

கடற்படை—விமானப்படை தளங்களின் பொறுப்பு

இலங்கை ஏற்றுக்கொள்ளும்

இலங்கையில் திரிகோண மலையிலுள்ள பிரிட்டிஷ் கடற்படைத் தளத்தையும், கட்டுநாயகாவிலுள்ள விமானப்படை தளத்தையும் ஏற்பதற்கு இலங்கை சர்க்கார் ஒப்புக்கொண்டுவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தி மொழி வெறிக்குக் குடியரசுத் தலைவரும் பலி?

ஆங்கிலம் வேண்டுமென்பது தன்மானமற்றக் கோரிக்கையாம்!

சவ மொழியால் தென்னாட்டு மொழிகள் பயனடைந்தனவாம்

ஐதராபாத், ஜூலை 7—

'ஆங்கிலம் இப்பொழுதுள்ள நிலைமையிலேயே இருக்க வேண்டுமென்று தன்மானமுள்ள எந்த மனிதனும் விரும்பமாட்டான்,"

என்று, குடியரசுத் தலைவர் இராசேந்திர பிரசாத் கூறியுள்ளாராம்.

அந்நிய மொழியை நம்பியிருக்கும் வரையில், இந்தியா, முழுச் சுதந்திரம் பெற்றதாக ஆகாதாம்.

இந்திய உயர் நீதி மன்றமோ (சுப்ரீம் கோர்ட்), அல்லது மக்கள்சபையோ ஆங்கிலத்தைப் பயன்படுத்த வேண்டிய அவசியமில்லை என்ற நிலைமை ஏற்படவேண்டுமாம்.

சவமொழி (சமஸ்கிருதம்), இந்திய நாட்டின் பண்பாட்டையும், நாகரீகத்தையும், ஐக்கியத்தையும் பிரதிபலிக்கிறதாம்! தென்னாட்டு மொழிகளும் சவமொழியால் பயனடைந்துள்ளனவாம்!

'ஞான மொழி' பேசி விளையாடு முகம் ஒன்றே! அமைச்சர் சுப்பிரமணியம் அதனை காட்டுகிறார்!!

தூத்துக்குடி, ஜூலை 7—

'வடக்கு கொழுக்கிறது; தெற்கு தேய்கிறது' என்ற ஞானோதயம் அமைச்சர் சுப்ரமணியனாருக்கு மீண்டும் ஓர் முறை ஏற்பட்டிருக்கிறது.

இந்த ஞானோதயம் ஏற்பட போதி மரமாகத் தூத்துக்குடியில் நடைபெற்ற சென்னை மாநில உருக்கு மாநாடு, இந்த முறை அமைந்திருக்கிறது.

"தென்னாடு தொழில்துறை அபிவிருத்தியில் (வடநாட்டை விட) மிகப் பின்தங்கிக் கிடக்கிறது என்பதில் கருத்து வேறுபாடே இருக்க முடியாது. இது வெறும் பிரச்சாரத்திற்காக எழுப்பப்படும் 'கோஷம்'—'சுலோகம்' அல்ல. மாறாக, மத்திய நிதியமைச்சரே ஒப்புக்கொண்டுள்ள மறுக்கொணாத, அசைக்க இயலாத உண்மையாகும்" என்று பேசியிருக்கிறார்—ஞான ஒளி பேசி விளையாடுமுகம் காட்டியிருக்கிறார் அமைச்சர் சுப்பிரமணியனார்.

குந்தா திட்டத்தைத் துவக்கிவைக்கும்போது, மத்திய நிதியமைச்சர், 'இந்தியா முழுவதிலுமாகத் தொழிலபிவிருத்திக்குச் செலவிடப்பட்டுள்ள பணம், நபர் ஒருவருக்கு ரூ. 27 விதமாகும்; ஆனால் இது சென்னை மாநிலத்தில் ரூ. 19 மட்டுமேயாகும். தேசீய விகிதத்தைப் போல நான்கு, ஐந்து, ஆறு மடங்கு பணம், பம்பாய் வங்கம் போன்ற பிரதேசங்களில் செலவிடப்பட்டிருக்கிறது' என்று கூறியிருப்பதை, தனது வாதத்திற்கு ஆதாரமாக அமைச்சர் சுப்பிரமணியம் எடுத்துக் காட்டி, தனது மனம் புண்ணாகும் நிலையை விளக்கியிருக்கிறார்.

இந்த நிலை மாற என்ன செய்யவேண்டும் என்கிறீர்களா? கூறுகிறார்—கேளுங்கள்!

சும்மா புகார் செய்வது போதாதாம்! பிற மாநிலங்களின் முன்னேற்றம் குறித்துக் கூச்சல் போடுவது காணாதாம். பின் என்ன செய்யவேண்டுமாம் தெரியுமா? கேளுங்கள் கேளுங்கள்.

இப்போதைவிட தென்னாட்டின் தொழிலபிவிருத்திக்காக அதிகப் பணம் ஒதுக்குமாறு உதவி செய்யுமாறு டில்லி வாழ் ஐயனை வற்புறுத்த வேண்டுமாம்! யார் என்கிறீர்களா?—சென்னை மாநில மக்கள்! எப்படி என்கிறீர்களா?—'ஒரே குரலில், ஒன்றுபட்டு நின்று' என்கிறார் அமைச்சர்.

இந்த அமைச்சர் எவரை தேற்றரவாளராக, அகில இந்தியாவிலும் வியாபித்து நிற்கும் 'தேவாம்சம்' பெற்ற ஞானப் பண்டிதராக ஏற்றுக்கொண்டிருக்கிறாரோ, அந்த டில்லி ஐயனின் ஆதரவு நாடி, கருணை பொழிய வேண்டி, அனைவரும் கூடி அழுவோம் பாடி! வாரீரோ என்கிறார் அமைச்சர் சுப்பிரமணியனார்.

சென்னைத் தொழிலதிபர் அனந்தராமகிருஷ்ணன் அந்த மாநாட்டிற்குத் தலைமை வகித்திருக்கிறார். அங்குதான் சுப்பிரமணியம் இந்த 'கீதம்' இசைத்திருக்கிறார்.

பொதுவாகவே, கருத்துக்களை வெளிப்படையாகத் தெரிவித்து ஒருவரை ஒருவர் புரிந்துகொள்வது நல்லது. அதே போது, பிறர்கூறும் கருத்துக்களையும் கேட்க வேண்டும். இது போன்ற மாநாடுகள் நமக்குள்ள கஷ்டங்களையும், கருத்து வேறுபாடுகளையும் எடுத்துக் கூறவும், அவற்றிற்கான பரிகாரங்களைத் தேடித்தரவும் பயன்பட வேண்டும் என்றும் சுப்பிரமணியம் கருத்துரைத்தாராம்.

இந்தியா விதித்துள்ள பொருளாதாரத் தடை

இந்தியாவிலுள்ள போர்ச்சுகீசியப் பகுதிகள்மீது இந்திய சர்க்கார் விதித்துள்ள பொருளாதாரத் தடையை முறியடிப்பதற்கு, கோவாவிலுள்ள போர்ச்சுகீசிய சர்க்காருக்கு உதவியளிக்க சில மேலை நாடுகள் முன்வந்திருப்பதாகத் தகவல்கள் கிடைக்கின்றனவாம்.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 9—7—'56 திங்கள்

தட்சிணப் பிரதேசம்

சாத்தியமான இடங்களில் இருமொழி, மும்மொழி மாகாணங்களை உருவாக்க முயல வேண்டும் என்பது அமிர்தசரஸ் காங்கிரசின் தீர்மானமாகும். பீகார்—வங்க இணைப்பு உடன்பாடு, அதற்கு ஒரு எடுத்துக்காட்டாகக் கொள்ளப்பட்டது.

பீகார்—வங்க இணைப்புக்கு, இரு மாகாண முதலமைச்சர்களும் உடன்பட்டு விட்டதே இறுதியான உடன்பாடு எனக் காங்கிரஸ் மேலிடம் தீர்மானித்துக் கொண்டது. அது இனி எந்தவகையிலும் உடைபட்டு விடாது என்ற உறுதியான நம்பிக்கையில், பீகார்—வங்க மாகாணங்களில் செய்யப்பட வேண்டிய திருத்தங்களை மாகாணத் திருத்த மசோதாவில் சேர்க்காமலும் இந்தியப் பேரரசு இருந்து விட்டது.

ஆனல், இந்தியப் பேரரசின் உறுதியான நம்பிக்கையில் இடி விழுந்து விட்டது. அது எதிர்பார்த்ததற்கு மாருக, பீகார்—வங்க ஒருமைப்பாட்டிற்கு முதற்கண் உடன்பட்ட வங்காள முதல் மந்திரியே, தனது ஒப்புதலை வாபஸ் பெற்றுக் கொண்டார்.

எதிர்பார்த்திருந்ததில் எதிர்பாராவகையில் தோல்வி ஏற்பட்டதும், பீகார் மாகாணத்தில் உள்ள வங்க மொழி வழங்கும் பகுதிகளை வங்காளத்துடன் இணைத்துவிட வேண்டும் என்பதற்கான சில மாற்ற மசோதா ஒன்றை, இந்தியப் பேரரசு உருவாக்கியது. அந்த மசோதாவிற்குத் தம்தம் ஒப்புதலை அளிக்கும்படி, பீகார் ஆட்சியையும் வங்காள ஆட்சியையும் இந்தியப் பேரரசு கேட்டுக்கொண்டு இருக்கிறது.

தனது உள்ளக்கிடக்கைக்கு முழுவதும் மாறுபட்ட ஒன்ருக அந்த மசோதா இருந்தபோதிலும், அதற்கு உடன்பட மறுக்கவோ, தாம் விரும்பும் வகையில் திருத்தம் செய்யவோ பீகார் சட்டசபைக்குத் துளியும் உரிமை கிடையாது. அதுபோன்றே வங்க சட்டசபைக்கும் மசோதாவில் மாற்றம் செய்யத் துளியும் அதிகாரம் கிடையாது.

குறிப்பிட்ட இத்துறையில் மாகாண சட்டசபைகளுக்கு இருக்கும் அதிகார வரம்பு ஒரு பக்கம் இருக்க, ஆளும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் மசோதாவிற்குத் திருத்தம் கொண்டுவருவதையும், எதிராக வாக்களிப்பதையும் காங்கிரஸ் கட்சி தடுத்து நிறுத்திவிட்டிருக்கிறது. ஒழுங்கு நடவடிக்கை என்ற தண்டனையை ஏற்கத் துணிந்து இருந்தால் அல்லாது, அந்தக் கண்டிப்பான காங்கிரஸ் கட்டளையை மீறுவதற்கு எந்த உறுப்பினரும் முன்வரமாட்டார். நிற்க.

மொழி 'வெறி'யைக் கருவறுக்கவும், இந்திய ஒருமைப்பாட்டை பலப்படுத்தவும் வேண்டுமானல், இருமொழி—மும்மொழி மாகாணங்களை உருவாக்குவதே சிறந்த மார்க்கமாகும் எனக் காங்கிரஸ் மேலிடம் முடிவு கட்டியது. அம்முடிவு, எதிர்பார்க்கும் விளைவைத் தரக்கூடியதா இல்லையா என்பது வேறு விஷயம். அது பற்றிய ஆராய்ச்சி இப்பொழுது அவசியமில்லை.

காங்கிரஸ் மேலிடம் நம்புவது போன்றே, இருமொழி மும்மொழி மாகாண அமைப்புக்களால், மொழி 'வெறி'யை ஒழித்து இந்திய ஒருமைப்பாட்டை நிலைபெறச் செய்ய முடியும் என்றே விவாதத்திற்காக ஒப்புக்கொள்ளுவோம்.

பீகார்—வங்க இணைப்பை ஒரு சிறந்த முன்மாதிரியாகக் கொண்டுதான், சாத்தியமான இடங்களில் இருமொழி—மும்மொழி மாகாணங்களை உருவாக்க முயற்சிக்க வேண்டும் என, காங்கிரஸ் மேலிடம் அமிர்தசரஸ் மாநாட்டில் தீர்மானித்தது. பின்பற்ற வேண்டிய முன்மாதிரியாக, மற்றவர்களால் கொள்ள வேண்டிய பீகார்—வங்க இணைப்போ இப்பொழுது முடிவாக முறிந்தே போய்விட்டது. அந்த முறிவை காங்கிரஸ் மேலிடம் ஒளிவு மறைவு இல்லாமல் ஏற்றுக் கொண்டும் விட்டது. ஏற்றுக் கொண்டதுடன், பீகாரில் இருக்கும் வங்க மொழிப் பகுதியை வங்காளத்துடன் சேர்ப்பித்துவிட சட்டமியற்றவும் துணிந்துவிட்டது.

பீகார்—வங்க இணைப்புத் தோல்வியும், அதை ஒப்புக்கொண்டு இந்தியப் பேரரசு மேற்கொண்டுவரும் செயல்களும் எதைக் காட்டுகின்றன? இருமொழி — மும்மொழி மாகாண அமைப்பு இனி சாத்தியமென்பதையா? இல்லவே இல்லை—முக்காலும் இல்லை.

இருமொழி—மும்மொழி மாகாண இணைப்பு முயற்சி எப்பொழுதும் தோல்வியிலேயே முடியும் என்பதைத் தான், பீகார்—வங்க இணைப்பு முறிவு திட்டவட்டமாக எடுத்துக்காட்டுகிறது. அந்தத் தோல்வியை ஒரு உயர்ந்த படிப்பினையாகக்கொண்டு, பல மொழி இணைப்பு மாகாண அமைப்பு முயற்சியைக் கைவிட வேண்டும்.

அந்த வகையைப் பின்பற்றித்தான், காங்கிரஸ் மேலிடம் இப்பொழுது செயல்பட்டுவருகிறது என்ற உண்மை, அமிர்தசரஸ் தீர்மானம் உருவாக்கப்பட்ட நேரத்தில் இருமொழி—மும்மொழி இணைப்பு குறித்து உரத்துப் பேசிய அளவில், இப்பொழுது காங்கிரஸ் மேலிடம் பேசாததிலிருந்து வெட்ட வெளிச்சமாகிறது.

இருமொழி—மும்மொழி இணைப்பினல் ஏற்படும் உயர் நலம் பற்றி, எந்தக் காங்கிரஸ் மேலிடம் வான்முட்டக் கூறி, பீகார்-வங்க இணைப்பைப் பலப்படபுகழ்ந்து பேசியதோ, அதே காங்கிரஸ் மேலிடம் பீகார்—வங்க இணைப்பு சரிந்ததும், வாய்மூடி மவுனியாகி விட்டது. காங்கிரஸ் மேலிடத்தின் வாயடைப்பை ஒரு பாடமாகக் கொண்டு, பொதுவாக தட்சிணப் பிரதேச ஆதாவாளர்களும் குறிப்பாக சக்ரவர்த்தி இராஜகோபாலாச்சாரியாரும் வாயடைத்துப் போவதே அறிவுடைமையாகும். அவ்வறிவுடைச் செயலைத்தான் அரசியல் உலகம் எதிர்பார்க்கும்.

ஆனல், அரசியல் உலகம் எதிர்பார்த்தபடி நிலைமை உருவாக இல்லை. அதற்கு மாருக, இருமொழி மும்மொழி அமைப்புபற்றி காங்கிரஸ் மேலிடம் பேசுவதை அறவே நிறுத்திவிட்டதும், அதையே ஒரு துவக்க நிலையாகக் கொண்டு, தட்சிணப் பிரதேச பேச்சைத் தீவிரமாக்க முன் வந்து இருக்கிருர் சக்ரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார்.

ஒரே நேரத்தில் காங்கிரஸ் மேலிடத்தைத் தூற்றவும், காமராசர் மீதுள்ள பகையை முடித்துக்கொள்ளவும், தட்சிணப் பிரதேசப் பேச்சை சக்ரவர்த்தியார் துவங்கியிருக்கிருர். தும்பை விட்டு வாலைப் பற்றும் அரசியல் மதியூகிதான் ஆச்சாரியார் என்பதை அவருடைய சென்ற கால அரசியல் வாழ்வு சுட்டிக்காட்டுகிறது. அந்த வரலாற்றைத் தெரிந்திருப்பவர்கள் ஆச்சாரியாரின் ஊத்தை வாய் உளறல் கண்டு ஆச்சரியப்படமாட்டார்கள்.

படித்தவர்களிடை வேலையில்லாத் திண்டாட்டம்

நிலைமையைத் தெளிவாக்கும் ஒரு புள்ளி விவரம்

தற்போது, நாட்டில் எந்த அளவுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் நிலவுகிறது என்பதை கீழ்க் காணும் நிலையிலிருந்து ஒருவாறு தெரிந்துகொள்ளலாம்:—

பூன நகரம், பூன மாவட்டக் கழகப் பள்ளிகளுக்கு 450 ஆரம்ப ஆசிரியர்கள் தேவைப்பட்டனர்; இதற்கு, 5,000 மனுக்களுக்குமேல் வந்திருந்தன.

பூன முனிசிபல் போர்டின்கீழ் 50 ஆரம்ப ஆசிரியர்கள் தேவைப்பட்டனர்; இதற்கு 1,500 பேர்களுக்குமேல் மனுச் செய்துள்ளனர்.

மனுச் செய்து கொண்டவர்களில் 70 பேர் பட்டதாரிகளாம்! 140 பேர் வரை மெட்ரிகுலேஷன் படித்தவர்களாம்!

அன்றியும், பூன மாவட்டக் கழகத்தின்கீழ் 400 ஆரம்ப ஆசிரியர் வேலைகளுக்கு 3,500 பேர் மனுச் செய்து கொண்டுள்ளனர்

1956-க்குப்பின் பிறந்த குழந்தைகள்

கல்வியறிவு பெருமலிருக்க முடியாதாம்!

சென்னை, ஜூலை 6—

"1956 அல்லது அதற்குப் பிறகு பிறந்த எந்த ஒரு குழந்தையும் கல்வியறிவு பெருமலிருக்க முடியாது என்ற நிலை, இரண்டாம் ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் உறுதி செய்யப்படும். மாநிலத்தின் சரித்திரத்தில் முதன் முதலாக, கல்வியறிவில்லாமையை ஒழிப்பதற்கான தேதி நிர்ணயிக்கிற வாய்ப்பு இப்போதுதான் கிடைக்கிறது,"

என்று, சென்னை சர்க்கார் கல்வி இலாகா செயலாளர் ஆர். ஏ. கோபாலசாமி, வானெலியில் பேசும்போது குறிப்பிட்டிருக்கிருர்.

4,000 தொழிலாளர்கள் 'போனஸ்' பெறுவராம்!

மதுரையிலுள்ள மீனட்சி ஆலை, மணப்பாறையிலுள்ள தியாகேசுவரா ஆலை ஆகியவற்றைச் சேர்ந்த 4,000 தொழிலாளர்கள் ரூ. 5-இலட்சம் போனசாகப் பெறுவரெனக் கூறப்பட்டுள்ளது.

ஜூலை 30, 31-ந் தேதிகளில் தொழிலாளர்களுக்கு இப்பணம் தரப்பட்டுவிடுமாம்.

தொழிலாளருக்கு வீடு கட்டித் தர டில்லி அளிக்கும் மானியம்!

ரூ. 31 இலட்சமும் வடநாட்டிற்கே!

புதுடில்லி, ஜூலை 7—

சர்க்கார் உதவியுடன் தொழில் துறையினருக்கான வீடுகட்டும் திட்டத்தின்கீழ், இந்திய சர்க்கார் 1966 ஏப்ரல், மே மாதங்களில், 1,626 குடியிருப்புகளைக் கட்டுவதற்கு கடன் தொகைகளாகவும், உதவித் தொகைகளாகவும் முறையே ரூ 31,76,200—ரூ. 7,64,990 அனுமதித்துள்ளனர்.

ஏப்ரல் மாதம் ஒதுக்கப்பட்ட தொகைகளில், பம்பாய் சர்க்காருக்கு 540 ஒற்றை அறைக் குடியிருப்புகளைக் கட்டுவதற்குக் கடனக ரூ. 7,55,000-ம், உதவித் தொகையாக அதற்குச் சமமான ஒரு தொகையும் கிடைக்கும்.

மத்தியபாரத் சர்க்காருக்கு பாதி கடனும், பாதி உதவித் தொகையுமாக மொத்தம் ரூ 13,50,000 கிடைக்கும்.

பெப்சு சர்க்காருக்கு பாதி கடனும், பாதி உதவித் தொகையுமாக மொத்தம் ரூ. 2,48,400 கிடைக்கும்

மத்திய பாரத்தைச் சேர்ந்த இந்தூரிலுள்ள கூட்டுறவு சங்கம் ஒன்றுக்குக் கடனக ரூ. 45,200 —உதவித் தொகையாக ரூ. 22 600 வழங்கப்படும்.

மே மாதம் ஒதுக்கப்பட்டுள்ள தொகையிலிருந்து, பம்பாய் சர்க்காருக்கு 75 ஒற்றை அறைக் குடியிருப்புகள் கட்டுவதற்கு கடனக ரூ 1,01,250—உதவித் தொகையாக அதற்குச் சமமானதொரு தொகையும் அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

பஞ்சாப் சர்க்காருக்குக் கடனக ரூ 2,19,870—உதவித் தொகையாக அதற்குச் சமமானதொரு தொகையும் கிடைக்கும்.

கல்கத்தாவிலுள்ள 'தி பெங்கால் பேப்பர் மில்ஸ் லிமிடெட்' என்னும் நிறுவனத்துக்கு உதவித் தொகையாக ரூ. 72,300 வழங்கப்படும்.

தூரியிலுள்ள (பெப்சு) 'தி மான்வா சுதர் மில்ஸ் லிமிடெட்' என்னும் நிறுவனத்திற்கு உதவித் தொகையாக ரூ. 50,450 அனுமதிக்கப்பட்டிருக்கிறது

'அறிவிக்கப்படும் உதவி தெற்கு நோக்கி வருமா?'

'இரண்டு மாதங்களில் தென்னுட்டிற்கு அளிக்கப்பட்ட உதவி என்ன?'

'தொழில்களைத் துவங்குவதற்கு பெரும் புள்ளிகள்தான் வேண்டுமா?'

"மத்திய சர்க்காரில் மனுபாய் எம். ஷா என்பவர், கனரகத் தொழில்களுக்கு மந்திரியாக இருக்கிருர். திருவாங்கூர்-கொச்சியில் இவர் பேசும்போது ஒரு முக்கியமான அறிவிப்பை வெளியிட்டுள்ளார்—'தனிப்பட்டவர்கள் பணமில்லை என்ற காரணத்திற்காக தொழில்களை ஆரம்பிக்காமலிருக்க வேண்டாம்; எந்தத் தொழிலை ஆரம்பித்தாலும் பண உதவி செய்ய மத்திய சர்க்கார் தயாராக இருக்கிறது; அத்துடன், இயந்திர நுணுக்க உதவியும் மத்திய சர்க்காரிடமிருந்து கிடைக்கும்'—இவ்வாறு, மந்திரி தேசாய் கூறியுள்ளார்.

'தொழில்களை ஆரம்பித்தால் சர்க்கார் செய்யும் உதவிகளைத்தான் மந்திரியும் குறிப்பிட்டுள்ளார். ஆனல், அந்த உதவிகளைப் பெறவேண்டிய வழிமுறைகள் யாருக்கும் தெரியாது; தெரிந்தாலும், ஏனே மற்றவர்களுக்கு வெளியே சொல்லுவதில்லை இந்நிலையில், தெற்கே உள்ளவர்களுக்கு, டில்லியின் உதவி, 'தூரத்துப் பச்சை'போல் காட்சி அளிக்கிறது!

"தெற்கிலே தனிப்பட்ட முறையில் தொழில்களை ஆரம்பிக்கப் போதிய பண வசதி படைத்த பெரும் புள்ளிகள் இங்கு யாரும் இல்லை—என்று, இதுதான் வரையில் சொல்லிவந்தார்கள். சமீபத்தில் சென்னை மந்திரி ஒருவரை சந்தித்தபோது, தெற்கிலே பெருந் தொழில்கள் ஆரம்பிக்கப்படவில்லை என்பதை, அடியேனது சிற்றறிவுக்கு எட்டியவரையில் புள்ளி விவரத்துடன் எடுத்துரைத்தேன்.

"அதற்கு மந்திரி சொன்ன பதில் இதுதான் — 'வடக்கிலே' பணவசதி படைத்த பெரும் புள்ளிகள் ஏராளம்; ஆகவே, அங்கு தொழில்கள் பெருகுகின்றன. தெற்கில் கோடிக் கணக்கில் முதல் போட்டு பெருந் தொழில்களை ஆரம்பிக்க வசதி உள்ளவர்கள் இல்லை என்றே சொல்லலாம்?

☆

"மத்திய சர்க்கார் மந்திரி ஷா சொல்லுவதைப் பார்த்தால், பெருந் தொழில்களை ஆரம்பிக்க பண வசதிகூடத் தேவையில்லை; ஆட்கள் முன்வந்தால் சகல உதவிகளையும் சர்க்கார் அளிக்கும்!

"மந்திரி சொல்லுவதைப் பார்த்தால், பண உதவி மட்டுமல்ல; இயந்திர நுணுக்க உதவியும் கிடைக்கும்; ஆகவே, தெற்கில் உள்ளவர்களுக்கு இது நல்ல வாய்ப்பு. இந்த அறிவிப்பை அடிப்படையாகக்கொண்டு சென்னை சர்க்காரும், மத்திய சர்க்காரிடமிருந்து அதிக உதவி வாங்க முன்வரலாம்.

"உதவியை அறிவித்தாலும், அது தெற்கு நோக்கி வருமா என்பது சந்தேகம்தான்.

"இவ்வருடம் ஏப்ரல் — மே மாதத்தில் தொழிலாளர்—நடுத்தர வகுப்பினருக்குக் குடியிருப்பு வசதிக்கு வீடுகட்ட கடனும், மானியமும் ஒதுக்கியிருக்கிருர்கள். ஏப்ரல் மாததத்தில் மட்டும் பம்பாய்க்கு 7 இலட்சத்து 55 ஆயிரம் ரூபாய் கடனுக் கிடைத்துள்ளது; இதே அளவு தொகை மானியமாகவும் அளிக்கப்பட்டுள்ளது. குவாலியருக்கு 13 இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் கடனுகவும—மானியமாகவும் கிடைத்துள்ளது. பெப்சு மாநிலத்திற்கு இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் கடனுகவும்—மானியமாகவும் கிடைத்துள்ளது. இந்த இரண்டு மாதங்களில் அளிக்கப்பட்ட உதவி மானியத்தில் ஏனே, சென்னையின் பெயர் காணப்படவில்லை! இது குறித்து ஆச்சரியப்படுவதற்கும் ஒன்றுமில்லை!

"வீடு கட்டும் திட்டத்தின் கீழ் கிடைக்கும் கடன், மானிய உதவிகளை சென்னை சரிவர பயன்படுத்திக் கொள்ளவில்லை—என்று, மத்திய சர்க்கார் மந்திரி ஒருவரே சுட்டிக்காட்டியுள்ளார்.

"ஒவ்வொருவரும் தன்னுடைய பதவியைச் சுற்றி அரண் கட்டிக் கொண்டிருக்கும்போது, வீடு கட்டுவதைப் பற்றி இங்கு யார் கவனிக்கப் போகிருர்கள?"

—இவ்வாறு, 6—7—56 'நவ இந்தியா' இதழில், 'ஊர் வம்பு' என்ற பகுதியில், 'யு.ஆர்.' என்பவர் குறிப்பிட்டுள்ளார்.

பம்பாய் நகரில் பாதாள இரயில்வே

ரூ. 62 கோடி செலவில் திட்டம்

பம்பாய் ஜூலை 6—

பம்பாய் நகரசபையில், நகரில் போக்குவரத்து நெருக்கடியைத் தவிர்ப்பதற்காக பாதாள இரயில் அமைப்பதற்கான திட்டம் ஒன்று பரிசீலனை செய்யப்பட்டிருக்கிறது.

ரூ. 62 கோடி செலவாகும் இத்திட்டத்தை, பம்பாய் மின்சார விநியோகம்—போக்குவரத்து நிறுவனம் நிறைவேற்றித் தருமாம்

இந்த நிறுவனம் பம்பாய் நகர சபையால் நடத்தப்படுவதாகும்.

பாதாள இரயில் அமைப்பது பற்றிய நவீன முறைகளையும், தொழில் நுட்ப, பொருளாதார வசதிகளையும் குறித்து நிபுணர்கள் கருத்தறிவிக்குமாறு கேட்கப்பட்டிருக்கிறார்கள்.

மொத்தம் 19 மைல் நீளத்திற்கு பாதாள இரயில் பாதை போடப்படும் என்றும், இது 5 அல்லது ஏழு ஆண்டுகளுக்குள் அமையும் என்றும், வேலை மூன்று கட்டங்களாகப் பிரித்துக்கொண்டு மேற்கொள்ளப்படும் என்றும் போக்குவரத்து நிறுவனத் தலைவரான கே. எஸ். தரியா தெரிவித்திருக்கிறார்.

மின்சார மூளை!

கவிஞர்களைவிட வேகமாகப் பாட்டு எழுதுகிறதாம்!

நியூயார்க், ஜூலை 5—

அமெரிக்காவின் மின்சார சங்கீத மூளை எழுதிய முதல் பாட்டு, அமெரிக்காவில், இத்திங்கள் 15-ம் நாள் 'டெலிவிஷன்' மூலம் காட்டப்படும் என்று தெரிய வருகிறது.

அமெரிக்காவின் எந்தக் கவிஞரைக் காட்டிலும் வேகமாக மின்சார மூளை பாட்டுக்களை எழுத முடியும் என்றும் இப்போதுள்ள சங்கீத விற்பன்னர்கள் கூறுகின்றனராம்.

56 அமெரிக்கக் கப்பல்களை ரஷ்யா மூழ்கடித்ததேன்?

மாஸ்கோ, ஜூலை 6—

மாஸ்கோவிலுள்ள அமெரிக்கக் கடற்படை அதிகாரியின் முன்னிலையில், 56 அமெரிக்கக் கப்பல்களை ரஷ்யா மூழ்கடித்திருக்கிறது; தற்காலத்திற்கு இலாயக்கற்றவைகள், போர்க்கால இரவல்—குத்தகை ஒப்பந்தத்தின்கீழ் அமெரிக்காவில் அளிக்கப்பட்டவைகளாகும்.

இக்கப்பல்களை மூழ்கடித்திருப்பதின் மூலம் அமெரிக்காவுக்குத் தரவேண்டிய இரவல் குத்தகைக் கடனை சுமார் 5 கோடி டாலராக ரஷ்யா குறைத்திருக்கிறது—எவ்வாறெனில், போர்க் கால ஒப்பந்தப்படி, இன்னும் உபயோகத்திலிருக்கும் கப்பல்களுக்கே ரஷ்யா கடன் செலுத்த வேண்டியுள்ளது.

மத்தியதர வகுப்பு மக்களின் இன்றைய நிலைமை

பிரிட்டிஷ் எழுத்தாளரின் படப்பிடிப்பு

மத்தியதர வகுப்பினர்தான் நாட்டின் முதுகெலும்பு. நாட்டின் வளத்திற்கும், பண்பாட்டுக்கும் அவர்கள் உழைப்பு கணிசமாக இருக்கிறது. அவர்களுடைய துயர்துடைக்க, நாட்டின் வரவு—செலவுத் திட்டத்தில் செய்யவேண்டுமென்ற கோரிக்கையுமுண்டு. மத்திய தர மக்களின் கோரிக்கைகளுக்கு ஆதரவு காட்டாவிட்டால், அடுத்த தேர்தலில் தோல்வியைக் காண நேரிடும் என்று அரசியல் வாதிகளுக்கு எச்சரிக்கை தரப்பட்டிருக்கிறது. இந்த 'ஓலக் குரல்' எழுவதும், தணிவதும், அடிக்கடி நிகழும் நிகழ்ச்சிகளேயாகும்.

மத்திய தர மக்களின் அதிருப்திக்குக் காரணமென்ன? 1948-ல் அவர்கள் பட்ட துயரங்களைவிட இப்போது துயரங்கள் பெருகி விட்டனவா? இப்போது அதிருப்தி வளர்ந்திருப்பதற்குக் காரணம் என்ன? இந்த நிலை நீடிக்குமா? இந்தக் கூக்குரலில் விளைவு எப்படி இருக்கும்?—இந்தக் கேள்விகளுக்கு விடை காணுதல் அவசியம்.

மத்திய தர வர்க்கம் என்று எவரைக் குறிப்பிடுகிறோம்? இதற்கு விடை கூறுவது கடினம்தான். பிரபுக்கள் அல்லது பணக்காரர்கள் என்று சொல்லக்கூடியவர்கள் ஒரு சில ஆயிரம் பேர்கள் உண்டு. ஏழைகள் அல்லது பாட்டாளி மக்கள் எண்ணிக்கை அதிகம்; ஆனால், இடைநிலையிலுள்ள பள்ளி ஆசிரியர்கள், டாக்டர்கள் இவர்களைவிட அதிக வருமானம் உள்ளவர்கள் இந்தப் பாட்டாளிகள். மத்திய தர வர்க்கத்தைச் சேர்ந்த சாதாரண அதிகாரியைவிட நல்ல வருமானமும், வாழ்க்கை நிலையும், தொழில் நுட்பமறிந்த தொழிலாளிக்கு உண்டு பணச் செலவில் மத்திய தர மக்களுக்கும்—பாட்டாளிகளுக்கும் மாறுபாடு உண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

நிலை என்ன?

மத்தியதர வர்க்கத்திற்கு இலக்கணம் கூறுவது எளிதல்ல 'மத்தியதர மக்கள்' என்பது பொதுச் சொல்; பல நிலைகளிலுள்ளவர்களை ஒன்றாகக் குறிப்பிடும் சொல்.

வியாபாரிகள், தங்களை மத்திய தர வகுப்பார் என்று கூறிக்கொள்கிறார்கள்; தங்களுடைய வருமானம், வாழ்க்கையை நடத்துவதற்குப் போதவில்லை என்கிறார்கள் இடைநிலையிலுள்ள வக்கீல், டாக்டர், பள்ளி ஆசிரியர்கள் போன்றவர்களைவிட, சுகமாகவும், வசதியுடனும் வியாபாரிகள் வாழ்கிறார்கள் என்பது தெளிவு. வியாபார வருமானத்திலிருந்து — இலாபத்திலிருந்துதான் அவர்கள் சுகமாக வாழ்கிறார்களா? தங்களுடைய குடித்தனச் செலவையும் வியாபாரச் செலவுடன் சேர்த்துக்கொள்வதால், அவர்களால் சுகமாக வாழ முடிகிறது.

ஆனால், நிரந்தர வருமானமுள்ளவர்களுடைய நிலை என்ன? மாதச் சம்பளம் வாங்குவோரும் ஓய்வு பெற்று - பென்ஷன் சம்பளத்தில் காலந் தள்ளுகிறவர்களும் நிலைமையைச் சரிக்கட்ட முடியாமல் தவிக்கிறார்கள். பணவீக்கம் பரவும்போது, பொருள்கள் விலையேறி விடுகிறது; வசதிகளைக் குறைத்துக்கொண்டு வாழ நேரிடுகிறது. விலைவாசி குறையும்போது, சிறிது வசதியாக வாழமுடிகிறது; ஆகவே, மத்திய தர மக்கள் அனைவரும் ஒரே நிலையில் துயரங்களை அனுபவிப்பதாகக் கூறமுடியாது

மாத வருமானமுள்ளவர்கள் அனைவரும் பணவீக்கக் காலத்தில் கஷ்டப்பட நேர்ந்தது. காலத்திற்கேற்றபடி வாழ்க்கை நிலையை உயர்த்திக்கொள்ள அவர்களால் முடியவில்லை. இதிலும், எல்லோருடைய நிலையும் ஒன்றெனக் கூறுவதற்கில்லை. ஒரு சிலருக்கு வீடு அல்லது தனிச் சொத்து அல்லது வியாபாரப் பங்குப் பத்திரங்கள் என்று உபரி வருமான வாய்ப்பு இருந்ததால் சிறிது சமாளித்துக் கொள்ள முடிந்தது.

வருமானம் உயரவில்லை

விலைவாசி உயர்வுக்கேற்றபடி, மக்களுடைய ஊதியம் உயரவில்லை. சம்பள உயர்வு கிடைத்திருப்பது எப்படி? வாழ்க்கைச் செலவு ஒன்றுக்கு மூன்றாக உயர்ந்துவிட்டது வருமானம் சரிபாதி கூடியிருக்கிறது. சிலருடைய வருமானம் இருமடங்காக இருக்கிறது. இதனால்தான் மக்கள் கஷ்டப்படுகிறார்கள் வரவுக்கும் - செலவுக்கும் சரிக்கட்ட முடியவில்லை. அதிருப்தி பெருகுகிறது. வருமான உயர்வையே மக்கள் விரும்புகிறார்கள்; சம்பளத்தைக் குறைக்கும் யோசனை எழுந்தால் எதிர்க்கிறார்கள்.

நடுத்தர உத்தியோகங்களின் தொடக்க நிலை ஊதியம், சாதாரண வாழ்க்கை நடத்தவே போதாது என்பதே இன்றுள்ள நிலை பாட்டாளி மக்களுடைய நிலை, யுத்தத்திற்குப் பிறகு மாறிற்று; அவர்களுடைய ஊதியம் பெருகிற்று; ஆனால் உத்தியோகம் பார்ப்பவர் ஊதியம் பாட்டாளி மக்களுடைய வருமானத்திற்கு ஈடாக—உயரவில்லை. உத்தியோக உயர்வும், வருமானமும், கவர்ச்சிகரமாக அமையவில்லை இந்த நிலையில் திருமணமும், குடும்பப் பொறுப்பும் பெரும் பாரமாகத் தோற்றமளிக்கிறது. எல்லாரும் இந்த நிலையை விரும்புவதாகக் கூறமுடியாது.

இளைஞர்கள், கால மாறுதலை அறிந்து, தங்களுடைய வாழ்க்கையைத் திருத்தியமைத்துக்கொள்ள முற்பட்டுவிட்டார்கள்; அதனால்தான் மத்தியதர மக்களுடைய கூக்குரலுக்கு வேகம் கூடவில்லை. பயன்தரும் விளைவும் ஏற்படவில்லை!

மாறுதல் அவசியம்

ஆனால், இந்த நிலை நீடிக்காது. யுத்த பிற்காலத்தில் விலைவாசிகள் உயர்ந்துகொண்டேயிருந்தன. பணவீக்கம் தணியவில்லை. எந்தக் கட்சி அரசு செலுத்தினாலும் விலையேற்றத்தைத் தடுக்க முடியவில்லை. கிராக்கியும் அலுப்பும் தான் மிஞ்சின. வருமான உயர்வு பெற, தொழிற்சங்கங்களின் உதவியை, பாட்டாளி மக்கள் பெறுகிறார்கள். அவர்களுடைய ஊதியம் பெருகப் பெருக, பணப் புழக்கமும் அதிகமாகிறது; அதனால் பணத்தின் மதிப்பும் குறைகிறது ஊதிய நிலை பெருகுவதற்கேற்றபடி உற்பத்திப் பெருகவில்லை. அதன் பயனாக பணவீக்கம் ஏற்படுகிறது. இடைநிலையிலுள்ளவர்கள் கஷ்டப்படுகிறார்கள். இப்போது, மத்தியதர மக்களும் சங்கங்கள் அமைத்துப் போராடத் தொடங்கிவிட்டார்கள். அதிக ஊதியமும், ஓய்வுச் சம்பளமும் கோரி, பள்ளி ஆசிரியர்கள் போராடினார்கள். இப்போது டாக்டர்களும் சம்பள உயர்வு கோரியிருக்கிறார்கள். இந்த இயக்கம் மற்றவர்களிடையேயும் பரவக்கூடும்.

சம்பள உயர்வு கோரி வெற்றி பெறுவதால் பணப்புழக்கம்தான் பெருகும்; நாணய மதிப்பு குறையும் பணவீக்கத்தைத் தடுக்க, கடுமையான நடவடிக்கைகளை சர்க்கார் எடுக்காவிட்டால், நிலைமையில் அபிவிருத்தி இராது.

செலவைக் குறைத்து, சிக்கன வாழ்வு நடத்துவதைப் பற்றி மத்தியதர மக்கள் சிந்திக்க வேண்டும். தினசரி சிறிது ஓய்வு பெறவும் அவகாசம் காணவேண்டும். காரியாலயத்திலும் வேலை செய்துவிட்டு வீட்டிலும் வேலை செய்வதால் உடல் சோர்வும், உள்ளச் சோர்வும் ஏற்படுகிறது. படிப்பு, சங்கீதம், அளவளாவுதல் என்று ஏதாவது ஒரு வழியில் பொழுது போக்குவது அவசியம்.

வாழ்க்கைக் குறைகளை எடுத்துக் கூறினாலும், மத்தியதர மக்கள், நிதானத்தை இழந்துவிடவில்லை. திறமையுடன் நிலைமையைச் சமாளித்துக்கொண்டு, தங்களுடைய கோரிக்கைகளையும் வற்புறுத்தி வருகிறார்கள். —ராய் லூயி

அரசியல் சட்டத்தில் எழுதாத அத்தியாயம்

பாக். பிரதமர் நிர்ணயிப்பு

இலண்டன், ஜூலை 6—

"பாகிஸ்தான் அரசியல் சட்டம் ஒரே ஒரு பிரச்சினையில் பூர்த்தியாகாமலிருக்கிறது. அது, காஷ்மீர் பற்றிய அத்தியாயமாகும்.

'இந்தியாவில் சேர விருப்பமா—பாகிஸ்தானில் சேர விருப்பமா' என்று முடிவு செய்ய காஷ்மீர் மக்களுக்கு வாக்கெடுப்பு உரிமை வழங்கப்பட்டவுடன், பாக். அரசியல் சட்டத்தில் எழுதப்படாத அந்த அத்தியாயம் எழுதப்பட்டுவிடும்; இது நியாயமான —ஜனநாயக—இந்தியா, பாகிஸ்தான், ஐ. நா. நிறுவனத்தால் வாக்களிக்கப்பட்ட உரிமையாகும்," என்று பாகிஸ்தான் பிரதமர் முகமது அலி கூறியுள்ளார்.

சுதந்திர தினக் கொண்டாட்டம்

அமெரிக்காவில் விபத்துகளுக்கு 221 பேர் பலி

வாஷிங்டன், ஜூலை 5—

ஜூலை 4—அமெரிக்காவின் சுதந்திர தினமாகும்! அன்று அமெரிக்கருக்கு விடுமுறை நாள்! அன்று மட்டும் ஏற்பட்ட விபத்துகளினால், சுமார் 221 பேர் வரை மாண்டதாக வாஷிங்டனுக்கு இன்று இரவுவரை கிடைத்துள்ள தகவல்படி தெரியவருகிறது.

இதில் பாதிப் பேர்—சுமார் 121-பேர்வரை, சாலைகளில் ஏற்பட்ட கார் விபத்துகளினால் மாண்டனர் என்று கூறப்படுகிறது.

கௌஹாத்தியில் ஒரு 'தொழில் எஸ்டேட்' ஏற்படுத்துவதற்கு முதலில் 5,70,000 கடன் உதவி அளிக்கும் திட்டத்திற்கு இந்திய சர்க்கார் ஒப்புதல் அளித்துள்ளனர்.

'தலைவலி தாங்க முடியாமல் சுவரில் மோதினாள்'

'கண்ணில் பட்ட கருப்புப் புள்ளியைக் கடவுளாக்கினர்'!

4 நாட்களில் அற்புதம் வெறுங்கதையாகிவிட்டது!

கல்கத்தா, ஜூலை 5—

கல்கத்தாவில் கலாக்கார் வீதியிலுள்ள ஒரு இல்லம், திடீரென்று 'புண்ணிய ஸ்தல'மாக மாறிவிட்டதாம்!

4 நாட்களுக்கு முன்னர் அந்த வீட்டில் ஆண்டவன் பிரசன்னமானார் என்று பரவிய வதந்தியே இதற்குக் காரணமாம்!

இந்தப் பொய் வதந்தி 60 வயதுக் கிழவி ஒருவரிடமிருந்து முதலில் வெளிவந்ததாம். இம்மூதாட்டி, அண்மையில் மிகவும் கடுமையான தலைவலியால் துயருற்றார் என்றும், வலி பொறுக்க இயலாமல் 'கடவுள் எங்கே இருக்கிறார்?' எனக் கூறிக்கொண்டு தன் படுக்கைக்குப் பக்கத்திலிருந்த சுவற்றில் மோதிக்கொண்டபோது, அச்சுவற்றில் ஒரு கருப்புப் புள்ளி ஏற்பட்டதென்றும் தெரிகிறது. இதைத் தொடர்ந்து, 'கடவுள் அந்தச் சுவற்றில் பிரசன்னமானார்' என வதந்தி கிளம்பிவிட்டதாகவும் கூறப்படுகிறது.

இச்செய்தி எட்டியவுடன், நூற்றுக்கணக்கான பெண்கள் தெய்வத்தைத் தரிசிக்க அந்த இல்லத்திற்கு வந்தவண்ணமாகவே இருக்கின்றனராம். சென்ற செவ்வாயன்று, தெய்வத்தைப் பார்க்க வருவோரின் கூட்டம் மிதமிஞ்சிப் போகவே அந்த இல்லின் சொந்தக்காரர் போலீசாரின் உதவியை நாட வேண்டியதாயிற்றாம்.

இத்தகு வதந்திக்கு ஆதாரமில்லை எனச் சொல்லி கூடியிருந்த மக்களை திருப்தி செய்வதற்குப் போலீசாரால் இயலாமல் போய்விட்டதால், அவர்கள், சேம நல நிறுவனமான மகல்லா குழுவை அணுகி, மேற்கொண்டுவருவோரைத் தடுக்க முயலும்படி கேட்டுக்கொண்டனர் என்றும், இக்குழு உறுப்பினர்கள் விடாது பொறுமையாக செய்த பிரச்சாரம் காரணமாக மக்கள் உண்மையறிந்து கலைந்து சென்றுவிட்டனர் என்றும் தெரிகிறது.

அசாமில் எண்ணெய் உற்பத்தித் தொழிற்சாலை!

சர்க்காரே நிறுவ வேண்டுமெனக் கோரிக்கை

பிரதேச காங்கிரசின் தீர்மானம்

கௌஹாதி, ஜூலை 6—

"அசாம் பிரதேசத்தில் புதிதாக காணப்பட்ட எண்ணெய் ஊற்றுக்களிலிருந்து எண்ணெய் தோண்டுவதற்காக, புதியதோர் எண்ணெய் உற்பத்திச்சாலை ஒன்றை அசாம் சர்க்கார் தனியாகவோ அல்லது, மத்திய சர்க்காருடன் கூட்டாகவோ சேர்ந்து துவக்க வேண்டும்,"

என்று, அசாம் பிரதேச காங்கிரஸ், தீர்மானம் ஒன்று நிறைவேற்றியுள்ளது.

மக்கள் சபை உறுப்பினரான அலி அகமத் கொண்டுவந்த இந்தத் தீர்மானத்தை, முதன் மந்திரி ஆமோதித்திருக்கிறார்.

பகிரகஞ் பகுதிக்கு அருகில், மேற்கு அசாமில் இந்தத் தொழிற்சாலை நிறுவப்பட வேண்டும் என்றும், அசாமில் ஏராளமான எண்ணெய் ஊற்றுக்கள் உண்டு என்றும், இவை சரியாகப் பயன்படுத்தப்பட்டால் இந்தியாவின் எண்ணெய்த் தேவையில் சரிபாதியைப் பூர்த்தி செய்யமுடியும் என்றும் முதன் மந்திரி தெரிவித்திருக்கிறார்.

காங்கிரஸ் அபேட்சகர்களை எதிர்த்து போட்டியிட்ட காங்கிரசார்

26 - பேர்மீது உ. பி. காங்கிரஸ் நடவடிக்கை

லக்னோ, ஜூலை 6—

கடந்த நகர சபைத் தேர்தல்களின்போது, காங்கிரஸ் அபேட்சகர்களையே எதிர்த்துப் போட்டியிட்ட காங்கிரஸ்காரர்கள் 26 பேர்களை உத்திரப் பிரதேச காங்கிரஸ் செயற்குழு, கட்சியிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்கு நீக்கிவைத்திருப்பதாகக் கூறப்படுகிறது.

'ஒதுக்கப்படும் 'கோட்டா'வை அனுப்புவதற்கும் தென்னாட்டிற்கு இரயில் கிடைப்பதில்லை'

மோசமான நிலைகுறித்து வடநாட்டு தொழில் நிபுணர் விளக்கம்

தூத்துக்குடி, ஜூலை 8—

"தென்னாட்டிற்கு ஒதுக்கப்படும் குறைந்த அளவு உருக்கு 'கோட்டா'க்களைக்கூட அனுப்பி வைப்பதற்கு இரயில் வசதி கிடைப்பதில்லை. இப்பகுதியில் இரயில்வே போக்குவரத்தை அபிவிருத்தி செய்யத் தென்னாட்டைச் சேர்ந்த மக்கள் சபை உறுப்பினர்கள் டில்லி ஆட்சியிடம் வற்புறுத்தவேண்டும். தென்னாட்டில் 'மீட்டர் கேஜ்' பிரிவை 'பிராட் கேஜ்' பிரிவாக மாற்றுவதற்குத் துரிதமான நடவடிக்கை எடுக்கவேண்டும்,"

—என்று தூத்துக்குடி இரும்பு வர்த்தகர் சங்க வெள்ளி விழாவுக்குத் தலைமை தாங்கிப் பேசுகையில், இந்திய எஞ்சினீயரிங் சங்கத் தலைவரும், டாட்டா இரும்புக் கம்பெனி விற்பனைப் பொறுப்பாளருமான கே. ஜே. கிளீட்டஸ் குறிப்பிட்டுவிட்டு, மேலும் சொன்னார்:—

'வர்த்தக—தொழிலியல்-உருக்கு மந்திரி காரியாலயத்துடன் நெருங்கிய தொடர்பு இருக்கும்பொருட்டு, தென்னாட்டிலுள்ள இரும்பு—உருக்கு வர்த்தகத் துறைப் பிரதிநிதிகளும், சர்க்கார் பிரதிநிதியும் கொண்ட சிறிய—செயல் மிக்க—செல்வாக்குள்ள குழு ஒன்றை நிறுவவேண்டும்.

"தென்னாட்டினரின் தேவைகளையும், உணர்ச்சிகளையும் டில்லியும்—கல்கத்தாவும் உணரும்படி செய்வதற்கு இத்தகைய குழு உதவியாக இருக்கும்; பின்தங்கிய பகுதிகளின் முன்னேற்றத்தில் அக்கரை கொள்வதாகக் கூறும் இந்திய அரசாங்கம் இதைப் பெரும் உதவியாகக் கொள்ளக்கூடும்.

"தொழில் அபிவிருத்தியில் தென்னாடு பின்தங்கிய பகுதியாக இருக்கிறது; ஆகையால், தென்னாட்டிலுள்ள எல்லோருடைய கவனத்தையும் அது கவரும்.

தென்னாட்டில் ஒரு உருக்கு ஆலை ஏற்படுத்துவது பற்றி அதிக நேரம் செலவிடப்பட்டிருக்கிறது; உடனடியாகச் செய்ய வேண்டியதையும், சாத்தியமானதையும் விட்டுவிட்டு, அதில், அதிக அளவு நேரம் வீணாக்கப்பட்டிருக்கிறது. இங்குள்ள தொழிலதிபர்கள், மேலும் அதிக மூலதனம் போடுவதற்கு ஊக்கம் காட்டினால், பலரக உருக்குப் பண்டங்களை தென்னாட்டில் தயாரிக்க முடியும்"

தென்னாட்டில் கச்சா பிலிம் தொழிற்சாலை

துவங்குவது சாத்தியமென ஜெர்மன் நிபுணர்கள் கருத்து

புதுடில்லி, ஜூலை 7—

"தென்னாட்டிலுள்ள சில நகரங்களில் கச்சா பிலிம் தொழிற்சாலை ஆரம்பிப்பது சாத்தியமானதேயாகும்," என்று, இந்தியாவில் அத்தொழிலை ஆரம்பிப்பது சம்பந்தமாகப் பரிசீலனை செய்வதற்காக இந்திய சர்க்காரின் அழைப்புக் கிணங்க வந்திருந்த ஜெர்மன் நிபுணர்கள், தங்கள் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனராம்.

கல்கத்தாவில் மூன்றுவது முறையாக 'அர்த்தால்'

பீகாரில் உள்ள வங்க மொழிப் பகுதிகளுக்காகப் போராட்டம்

கல்கத்தா ஜூலை 8—

மேற்கு வங்க மாநிலத்திற்கு எல்லைகள் நிர்ணயிப்பதில் இழைக்கப்பட்டுள்ள அநீதிக்கு எதிராகக் கல்கத்தா நகரில் மகத்தானதோர் பொது வேலை நிறுத்தம் கடந்த சனிக்கிழமையன்று கடைப்பிடிக்கப்பட்டதின் மூலம், கல்கத்தா நகரம், நாள் முழுதும் வழக்கமான பரபரப்பையும், சோபையையும் இழந்து வெறிச்சோடிக் கிடந்தது.

மாநிலப் புது அமைப்பு விவகாரத்தை ஒட்டிக் கடந்த ஆறு மாதங்களுக்குள், மேற்கு வங்கத்தில் நடைபெற்ற அர்த்தால்களுள் இது மூன்றுவதாகும்.

இந்த அர்த்தாலின்போது நகரில் நடைபெற்ற சுமார் 20 சம்பவங்களில், 6 பேர் வரை காயம்பட்டனர் என்றும் தெரியவருகிறது.

இடதுசாரிகள் இந்த அர்த்தாலை நடத்தி வெற்றி கண்டிருக்கின்றனர்.

அர்த்தாலை நடத்திய இடதுசாரிகள் அடங்கிய மொழிவழி மாநில அமைப்புக் குழுவினர் பீகாரிலுள்ள வங்கமொழி பேசும் பகுதிகள் அனைத்தும் மேற்குவங்கத்துடன் இணைக்கப்பட வேண்டும் என்று கோருகின்றனர்.

முதன் மந்திரி டாக்டர் ராயின் இல்லத்திற்கு எதிராக வெல்லிங்டன் சதுக்கத்தில், அர்த்தால் முடிவில் மாலையில் நடைபெற்றப் பொதுக்கூட்டத்தில், பலகட்சியினரும் கோரிக்கையை வற்புறுத்திப் பேசியிருக்கின்றன.

உலகப் பொருளாதார அபிவிருத்தி!

ஐ. நா. கவலை தெரிவிக்கிறது

நியூயார்க், ஜூலை 8—

"யுத்தம் முடிந்த கடந்த பத்தாண்டுக் காலத்தில் உலகப் பொருளாதார அபிவிருத்திப் போக்கு, ஆழ்ந்த கவலையைத் தருவதாகவே இருந்து வருகிறது,"

என்று ஐ. நா. அறிக்கை ஒன்று கூறுகிறது.

இதுவரை இல்லாத பெரும் வளர்ச்சி ஏற்பட்டிருந்தும்கூட உலகத்தின் பெரும் பகுதியில் மக்களிடை ஏழ்மை எப்போதும்போல் நின்று நிலவியே வருகிறது என்றும் அந்த அறிக்கை கூறுகிறது.

முதல் உலக யுத்தம் முடிந்ததை அடுத்தத் தலைமுறையின் பொருளாதார நிலையைவிட, இரண்டாம் யுத்தம் முடிவை அடுத்தத் தலைமுறையின் பொருளாதார நிலை, சற்று முன்னேற்றமானதாகவே இருந்திருக்கிறது என்றும் அந்த 1955-ம் ஆண்டிற்கான ஐ நா. உலகப் பொருளாதார சர்வே அறிக்கை கூறுகிறது.

பிரிவினை சக்திகளை ஒடுக்க அகில இந்திய முன்னணி வேண்டுமாம்

வடநாட்டு ஆதிக்கத்தை எதிர்ப்பதற்கென்றால் தட்சிணப் பிரதேசம் கூடாதாம்

இந்துமத வெறியரின் கருத்து

சென்னை, ஜூலை 8—

"இந்தியை ஆட்சி மொழியாக்குவதில், குறிப்பாகத் தென்னாட்டில் மிகுந்த கஷ்டங்கள் இருக்கின்றன.

"ஆனால் இந்தியை ஆட்சி மொழியாக்குவதற்குரிய காலவரம்பை நீடிப்பதின் மூலம் இந்தக் கஷ்டங்களைத் தவிர்க்க முடியும்.

"அகில இந்திய உத்தியோகங்களுக்கு, இந்தியோடு ஒரு தென்னாட்டு மொழியையும் கட்டாய பாடமாக்க வேண்டும்.

"பொருளாதாரக் காரணங்களுக்காக மட்டுமே தட்சிணப் பிரதேசம் அமைப்பது என்றால் அது வரவேற்கத் தக்கதே; ஆனால், வடநாட்டு ஆதிபத்தியத்தை எதிர்ப்பதற்காக என்று கூறப்படுமானால் தட்சிணப் பிரதேசம் அமைவது மிகுந்த ஆபத்தானதாகும்,"

என்று 'அகில பாரத இந்துமகா சபை'த் தலைவரான தேஷ் பாண்டே என்பார், பத்திரிகையாளரிடம் கூறியிருக்கிறார்.

"இந்தியாவின் ஒற்றுமையைக் குலைக்கத் திட்டமிட்டு வளரும் பிரிவினைச் சக்திகளை ஒடுக்க, 'ஒரு அகில இந்திய முன்னணி' அமைக்கவேண்டும்" என்றும் அவர் கூறினாராம்.

பீகார் சட்டசபை டில்லியின் மசோதாவை நிராகரிக்கிறது

மேற்கு வங்கத்திற்குப் பிரதேசங்களை மாற்றும் திட்டத்தைக் கைவிடக் கோருகிறது

ராஞ்சி, ஜூலை 8—

பீகார், மற்றும் மேற்கு வங்க நிலமாற்ற மசோதாவில் கண்டுள்ளபடி, பீகாரில் உள்ள சில பகுதிகளை மேற்கு வங்கத்திற்கு மாற்றும் திட்டத்தைக் கைவிடுமாறு பீகார் சட்டசபை இந்தியப் பேரரசைக் கேட்டுள்ளது.

மசோதா, மூன்று நாட்களாக சட்டசபையில் விவாதிக்கப்பட்ட பின்பு இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டது என்றும், சட்டசபை, இந்த மசோதா மக்கள் சபையில் வருவதற்காக குடியரசுத் தலைவர் செய்துள்ள சிபாரிசைத் திரும்பப் பெறவேண்டுமென்று இறைஞ்சியுள்ளது என்றும் தெரியவருகிறது.

மசோதா பற்றி விவாதிப்பது என்ற முதன் மந்திரியின் தீர்மானத்திற்கு, லட்சுமி நாராயண் சுதன்சு என்ற காங்கிரஸ் உறுப்பினர், மேற்கண்ட முடிவிற்கான திருத்தத்தைக் கொண்டுவந்தார்; அந்தத் திருத்தம் ஏற்கப்பட்டிருக்கிறது.

குதிரை கீழேயும் தள்ளி குழியும் பறிக்கிறது!

லாகூர், ஜூலை 8—

செஞ்சட்டை இயக்கத் தலைவரான கான் அப்துல் கபார்கானை சிறைப்படுத்தியிருப்பது போதாதென்று, மேற்கு பாகிஸ்தான் அரசாங்கம் இப்போது, செஞ்சட்டை இயக்கத்தையே கருவறுக்கத் தீர்மானித்துத் தடைசெய்திருக்கிறது என்று தெரியவருகிறது.

மேற்கு பாகிஸ்தான் கவர்னர், 1908-ம் ஆண்டு குற்ற (திருத்தச்) சட்டத்தின் 16-வது பிரிவின்படி செஞ்சட்டை இயக்கத்தைத் தடை செய்து உத்தரவு பிறப்பித்திருப்பதாக சர்க்கார் அறிவிப்புக் கூறுகிறதாம்.

விவசாயத் தொழிலாளர் சங்க ஆண்டு விழா

11-7-56 மாலை 5 மணியளவில் மோகனூர் பிர்க்கா விவசாயத் தொழிலாளர் சங்க முதலாவது ஆண்டு விழா, அழகிரி திடலில் திரு. எஸ் எம் சிவநேசன் தலைமையில் நடைபெறும் தோழர்கள் பலர் பேசுவர். அன்று மாலை 4-மணிக்கு சங்கக் கட்டிடத்திலிருந்து ஊர்வலம் புறப்படும்.

திருவள்ளுவர் மாணவர் கழக ஆண்டு விழா பொதுக்கூட்டம்

11-7-56 மாலை 6 மணியளவில், செங்குன்றம் (ரெட்ஹில்ஸ்) கிராண்டு லைன் திருவள்ளுவர் மாணவர் கழக முதலாவது ஆண்டு நிறைவு விழா மாரியம்மன் கோயில் மைதானத்தில், தோழர் டி இராசரத்தினம் தலைமையில் நடைபெறும்.

தோழர் காஞ்சி–கல்யாணசுந்தரம் அவர்கள் திருவள்ளுவர் படத்தைத் திறந்து வைப்பார்.

தோழர் ஈ. வெ. கி சம்பத் அவர்கள், 'தற்கால அரசியலும் வள்ளுவரும்' என்ற தலைப்பில் விரிவுரையாற்றுவார்.

திருமணம்

11-7-56 காலை 8-30 மணியளவில், பந்தநல்லூரையடுத்த வக்காரமாரியில் தோழர் பிச்சுமுத்து—தோழியர் திருபுரசுந்தரி திருமணம், தோழர் பொ. தருமன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் ம. சோமணி, என். அசோகன் வாழ்த்துரை வழங்குவர்.

வைகைத் திட்டத்திற்கு சிறைக் கைதிகள்

ஈடுபடுத்துவதற்கு சர்க்கார் அனுமதித்துள்ளனர்

சென்னை, ஜூலை 7—

சிறைச்சாலைக்கு வெளியே கைதிகளைக்கொண்டு, பயன்தரும் பணிகளில் ஈடுபடுத்தும் திட்டம் நல்ல பலனை அளிப்பதாக இருக்கிறது; அன்றியும், வெளியில் பணியாற்றும் வாய்ப்பைக் கைதிகளும் வரவேற்கின்றனர் என்று கூறப்பட்டுள்ளது.

சென்னை மத்திய சிறையிலுள்ள 200 கைதிகளை ஆண்டிப்பட்டி அருகிலுள்ள வைகை நீர்த்தேக்கத் திட்ட வேலைக்கும், 50 கைதிகளை சென்னை பஸ் போக்குவரத்து டிப்போக்களிலும் ஈடுபடுத்துவதற்கு சர்க்கார் அனுமதித்துள்ளனர். இந்தத் திட்டம் வெற்றிபெற்றால், மராமத்து இலாகா தொழிற்சாலைகளிலும் இத்திட்டம் விரிவுபடுத்தப்படுமாம்.

வைகை திட்டத்தில் பணியாற்றுவதற்குரிய கைதிகளின் எண்ணிக்கை ஆயிரம் வரையிலும் செல்லக்கூடுமாம்.

125 பஞ்சாயத்துக்களில் தேர்தல் நிறுத்தம்

குண்டூர் உயர் நீதிமன்றத்தில் முடிவு செய்யப்படாமலிருக்கும் ரிட் மனுக்களின் விளைவாக ஆந்திராவில் 125 பஞ்சாயத்துக்களின் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன 'வார்டு'கள் அறிவிப்பு சம்பந்தமாக 'ரிட்' மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

பிரிட்டிஷ் இராணி இந்தியா வருகிறார்?

லண்டன், ஜூலை 8—

'மேன்மைதங்கிய பிரிட்டிஷ் இராணியார்' இந்தியாவிற்கு வருகை தருவது பற்றிய ஒரு யோசனை பரிசீலனையிலிருக்கிறதாம்.

இந்தியா ஒரு நடுநிலைக் கொள்கையுடைய நாடு என்பது, ரஷ்யத் தலைவர்களின் வருகைக்குப்பின் இராணியாரின் வருகையினால் உறுதி செய்யப்படும் என்றும், இந்தியப் பிரதமர் நேருவுக்கு, இராணியார் தமது கணவருடன் இந்தியா வரவேண்டுமென்ற ஆசை நெடுநாட்களாகவே உண்டு என்றும், ஆனாலும், இன்னும் அதிகார பூர்வமான அழைப்புத் தரப்படவில்லை என்றும், இதுபற்றி நடைபெறும் பேச்சுவார்த்தைகள் இரகசியமாக வைக்கப்பட்டுள்ளன என்றும் இலண்டன் இதழ் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது

'வேல்ஸ் இளவரசர் 1922-ல் இந்தியா சென்றிருந்தார்; ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் 1911-ல் இந்தியா வந்திருந்தார்,' என்றும் அந்த இதழ், பழைய நிகழ்ச்சிகளைக் குறிப்பிட்டுக் காட்டியுள்ளது.

நாட்டில் பெருகிவரும் தேவையைச் சமாளிப்பதற்கு, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் விவசாய உற்பத்தி இலக்கை குறைந்தபட்சம் 25 சதவிகிதமாவது உயர்த்த வேண்டுமென்று சமீபத்தில் நடைபெற்ற விவசாய அமைச்சர்கள் மாநாட்டில் முடிவாகியுள்ளதாம்

தமிழுக்கு முதலிடம்!

மலேயா பல்கலைக் கழகத்தில் இந்தியா பற்றிய படிப்பிற்கு தனிப் பிரிவு

சிங்கப்பூர், ஜூலை 7—

புதிய கல்வி ஆண்டிலிருந்து (அக்டோபர்) மலேயா பல்கலைக் கழகத்தில், இந்தியா பற்றிய படிப்புகளுக்கென ஒரு தனிப் பிரிவு ஏற்படுத்தப்படுமெனக் கூறப்பட்டுள்ளது.

இந்தியக் கலாச்சாரம், மொழிகள் உட்பட விரிவான பல விஷயங்கள் பற்றி வாசிப்பதற்கு வகை செய்யும் அப்பிரிவில், துவக்கத்தில் தமிழ் மொழிக்கும், தமிழ் இலக்கியத்துக்கும் முதலிடம் அளிக்கப்படுமென்றும் குறிப்பிட்டுக் கூறப்பட்டுள்ளது.

பண்டார நாயகாவைத் தொடர்ந்து...!

புதுடில்லி, ஜூலை 6—

நிக்கோபார் தீவில் தளம் வைத்துக்கொள்ளுவதற்கு, இதுவரையில் பிரிட்டிஷ் விமானப் படைக்கு அளித்து வந்த அனுமதியைத் திரும்பப் பெறுவதென இந்திய சர்க்கார் தீர்மானித்து விட்டனராம்.

இந்திய விமானப்படை, ஜூலை 1-ந் தேதியிலிருந்தே விமானத் தளத்தின் பொறுப்பை தன்னுடைய முழுக் கட்டுப்பாட்டிலும், பொறுப்பிலும் எடுத்துக்கொண்டு விட்டதாகக் கூறப்பட்டுள்ளது

இலங்கையிலுள்ள தனது விமான, கடற்படைத் தளங்களைப் பிரிட்டன் திரும்பப் பெற வேண்டுமென்று இலங்கை அரசாங்கம் கோரியதைத் தொடர்ந்து, நிக்கோபார் விமானத் தளத்தை 'மாற்றுத் தள'மாகப் பிரிட்டன் பயன் படுத்தக்கூடுமெனக் கருதியே பிரிட்டனுக்கு அளிக்கப்பட்டுவந்த சலுகையை திரும்பப் பெற இந்திய சர்க்கார் தீர்மானித்தனராம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம் ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம் ஏ.